**தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 மே 26 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

மாவட்ட செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 707.00 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 629.51 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 77.49 மில்லியன் அதாவது 10.96 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழும் | 607.00 | 600.29 | 6.71 | 1.11 |
| மூலதன | 100.00 | 29.22 | 70.78 | 70.78 |
| மொத்தம் | 707.00 | 629.51 | 77.49 | 10.96 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 27 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் ரூபா 2,812 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 2,496 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 316 மில்லியன் அதாவது 11 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 44.16 | 43.18 | 31.00 | 41.53 | 144.00 | 136.59 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 04 வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 527 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6003/0000/00/0002/0067/000 | 17.62 |
| 6003/0000/00/0013/0037/000 | 76.44 |
| 6003/0000/00/0017/0004/000 | 34.42 |
| 6003/0000/00/0016/0019/000 | 398.62 |
| மொத்தம் | **527.10** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

கேகாலை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதி ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (உ) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 |
| (ஊ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |
| (எ) | குழுக்கூட்ட அறிக்கை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) ஆம் வழிகாட்டி |
| (ஏ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்கள்

11 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டில் 14 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களில் காணப்பட்ட 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 181,944,766 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கேகாலை மாவட்ட செயலக புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் எதிர்வரும் வருடங்களில் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 4,262,500 தொகை நிதிப்பிரமாணம் 215 இன் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

27901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 531,526 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 03 வருடங்கள் முதல் 06 வருடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கடன் முற்பண இணக்கக்கூற்றில் இரண்டு பிரதேச செயலகங்களில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிக்கும் அப்பிரதேச செயலகங்களின் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் இறுதி மீதிக்கும் இடையே ரூபா 953,123 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் விரிவானதொரு கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஜப்பான் அரசின் உதவியின் கீழ் கிடைக்கப் பெற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் டேலர் பௌசர் என்பன துருப்பிடித்தல் தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பின்னர் 2013 யூன் 20 ஆந் திகதிய HAF/01/09/நானாவித ஆம் இலக்க அரச நிர்வாக அமைச்சுச் செயலாளரின்

கடிதத்தின் பிரகாரம் பவுசர் வாகனம் 03 மாத காலத்திற்குள் பிரதேச சபைக்கு கையளிக்குமாறும், மோட்டார் சைக்கிளை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்குமாறும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 01 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 76.7 மில்லியன் செலவில் பின்வரும் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உரிய உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படாமையினால் அக்கட்டிடம் 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

| சொத்து வகை | மதிப்பிடப்பட்ட பெறுமதி | ஆற்றப்பட்ட வேலையின் பெறுமதி | விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| வறக்காப்பொல வாராந்த சந்தை முதலாம் கட்டம் | 28,500,000 | 22,765,600 | கட்டிட நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை |
| வறகாப்பொல வாராந்த சந்தை இரண்டாம் கட்டம் | 12,713,100 | 9,323,150 | கட்டிட நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை |
| றம்புக்கன சந்தைத் தொகுதி | 35,246,264 | 21,877,271 | கட்டிட நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை |
| குறகல தாய்சேய் சிகிச்சை நிலையம் | 12,154,326 | 12,154,326 | வைத்தியரொருவர் இல்லாமை |
| மொத்தம் | **99,197,379** | **76,704,036** | |

### 3.7 இணங்காமைகள்

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை** | | |
| * XIX ஆம் அத்தியாயத்தின் | - | கேகாலை மேலதிக மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் 2000 யூன் 28 |

| | | | |
|---|---|---|---|
| | 6(2) ஆம் உப பிரிவு | | ஆந் திகதி அரசாங்க உத்தியோகத்தரல்லாத நபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 மார்ச் 20 ஆந் திகதி வரையிலும் மீண்டும் மாவட்ட செயலகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| * | XIX ஆம் அத்தியாயத்தின் 7 மற்றும் 9 ஆம் பிரிவுகள் | | அரசாங்கத்தின் நிறைவேற்று உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்தின் உரித்து மீளப்பெறப்படாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| * | XIX ஆம் அத்தியாயத்தின் 5(4) ஆம் உப பிரிவு | 12,319 | 2012 செப்தெம்பர் 20 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 17 ஆந் திகதி வரை உத்தியோகபூர்வ வீட்டில் குடியிருந்து வருவதுடன் உத்தியோகத்தரின் நிலுவை வீட்டு வாடகையும், நிலுவை தொலைபேசிக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| * | XIX ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவு | 124,250 | உத்தியோகத்தரினால் ரூபா 99,400 பெறுமதியான பொருட்பதிவேட்டுப் பொருட்கள் அலுவலகத்திற்கு மீளக் கையளிக்கப்படாதிருந்ததுடன் அந்த பொருட்களின் பெறுமதியில் 25 சதவீதம் சேர்த்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

மாதாந்த உழைத்தல் எல்லை 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் ரூபா 62,500 இனை விஞ்சுகின்ற உத்தியோகத்தரிடமிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், கலிகமுவ பிரதேச செயலாளரின் மொத்த உழைப்பு எல்லையினை விஞ்சியிருந்தும். அந்த உத்தியோகத்தரிடமிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடல், செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்**

மாவட்ட செயலகக் கட்டிடத்தை பூர்த்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 50,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய கட்டிடத்தின் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது கைவிடல்**

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

(i) உப ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்ட தெறணியகல பஸ் நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தை பௌதீக ரீதியில் பரீட்சித்த சந்தர்ப்பத்தின்

போது ஒரு கட்டிடத்தின் கீழ்தளம் சாந்து பூசும் மட்டம் வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அந்தச் சுவர் வெடிப்பிற்குட்பட்டிருந்தது. இன்னுமொரு கட்டிடத்தின் தூண் மட்டததுடன் நிறுத்தப்பட்டிருந்தது. இதற்காக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 44,801,291 ஆக இருந்ததுடன் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையில் ரூபா 17,372,894 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ii) 2014 இன் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாடுகளிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட துத்திரிப்பிட்டி பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 23,270,905 ஆக இருந்ததுடன் அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றவதற்கு உப ஒப்பந்தக்காரரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையில் ரூபா 9,961,591 செலவிட்டு தளத்திற்காக கொங்கிரீட் தட்டு மாத்திரம் போடப்பட்டிருந்தது. எஞ்சிய வேலைகள் நிறைவேற்றப்படாது செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டின் நடைமுறை வேலையான துனுகம மாகடவற வீதியின் 3.25 கிலோ மீற்றர் தூரத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா 89,462,048 ஆக இருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் 2.10 கிலோ மீற்றர் அளவு மாத்திரம் வேலை பூர்த்திசெய்யப்பட்டு வேலை கைவிடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 40,219,565 தொகை செலவிடப்பட்டிருந்தது. வேலை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக இந்த வீதி இலக்கிடப்பட்ட பணிகளில் பயன்படுத்துவதற்கு முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது.

(iv) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் சப்ரகமுவ மாகாணசபையின் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட 05 நிர்மாண செயற்திட்டங்களுக்காக ரூபா 125,546,950 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது, அறணாயக்க பிரதேச செயலாளர் பிரிவில் மாஓயா ஊடாக நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட மாஓயா நடை பாலத்திற்காக ரூபா 3,984,096 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 748,415 தொகையும், 2015 ஆம் ஆண்டில் ரூபா 72,164 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 820,579 தொகை செலுத்தப்பட்டிருந்தது, 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது உத்தேச சிறிய பாலம் பிரதான வீதியின் அருகில் தூண் ஒன்றும் ஓயாவின் மத்தியில் தூண் ஒன்றும் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது.

(v) 2014 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட 2015 ஆம் ஆண்டில் நடைமுறை வேலையாக்கப்பட்ட நூறிய பஸ்னாகல பள்ளேபாக வீதியில் 4.9 கிலோ மீற்றர் தூரத்தை நிர்மாணிக்கும் வேலைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா 130,045,804 ஆக இருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும், 3.4 கிலோ மீற்றர் அளவு மாத்திரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. அது வரையிலும் செயற்திட்டத்திற்காக ரூபா 61,260,893 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(vi) 2014 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நடைமுறை வேலையாக்கப்பட்ட அறணாயக்க பொதுச் சந்தைத் தொகுதியின் நிர்மாணத்திற்குரிய மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 81,672,745 ஆக இருந்தது. தூணின் அடி மாத்திரம் போடப்பட்டு வேலை நிறுத்தப்பட்டிருந்த இந்த நிர்மாணத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 10

சதவீதமாக இருந்ததுடன் நிதிசார் செயல்முன்னேற்றம் 20 சதவீதம் அதாவது ரூபா 13,559,594 ஆக இருந்தது.

(viii) 2014 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நடைமுறை வேலையாக்கப்பட்ட நேரடியாக ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்ட புளத்கொஹுபிட்டிய பஸ்நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 24,028,490 ஆக இருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் கீழ்தளத்தின் சுவரைக் கட்டுதல், மேல்மாடியில் சுவரைக் கட்டி கூரையைப் பொருத்துதல் போன்ற வேலைப்பகுதிகளை மாத்திரம் நிறைவேற்றுவதற்கு ரூபா 11,682,760 செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய வேலைப் பகுதிகளை நிறைவேற்றாமல் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது.

**(இ) நிறைவேற்றப்படாத செயற்திட்டம்**

9092 சதுர அடி அளவான 06 தட்டுக்களையும் 2320 சதுர அடி அளவான 04 தட்டுக்களையும் கொண்டுள்ள புதிய மாவட்ட செயலகக் கட்டிட நிர்மாணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 495,000,000 ஆக இருந்தது. 2010 யூலை 20 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. குறித்த நிர்மாணக் கம்பனிக்கு ரூபா 294,982,342 தொகையில் நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு ரூபா 91,934,156 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த இடத்தில் மண்ணைவெட்டி மட்டப்படுத்துவதற்கு வேறொரு நிர்மாண நிறுவனத்திற்கு 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,850,123 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2014 மே 10 ஆந் திகதி செயற்திட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 மே 17 ஆந் திகதி வரையிலும் 06 தட்டுக்களையுடைய 9092 சதுர அடி அளவான கட்டிடத்தின் 3 மாடிகளின் கொங்கிரீட் தூணுடன் 3 கொங்கிரீட் தட்டுக்கள் மாத்திரம் அமைத்து நிர்மாண நடவடிக்கைகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) கட்டிடத்தின் முன்பக்கமும் பின்பக்கமும் படிக்கட்டுக்களுக்காக இணைக்கப்பட்ட சகல கம்பிகளும் துருப்பிடித்திருந்தன.

(ii) கீழ் மாடியின் நடுவில் நிலம் வெடித்திருந்தது.

(iii) அடிப்பீட மனைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) செயற்திட்டத்தின் மதியுரைச் சேவைக்கான பட்டியல்களை உறுதிப்படுத்துவதற்காகவும் ஆரம்ப மதியுரை நடவடிக்கைகளுக்காகவும் (மேற்கூறப்பட்ட பிரகாரம் கட்டிடம் இரண்டையும் நிர்மாணிப்பதற்கான மதியுரைச் சேவைக் கட்டணமாக) உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை ரூபா 15,000,0000 ஆக இருந்தது. செயற்திட்டம் கைவிடப்படும் சந்தர்ப்பம் வரையிலும் அதில் ரூபா 9,892,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 4,262,500 தொகை கொடுப்பனவு செய்வதற்காக பொது வைப்புக் கணக்கில் அந்தப் பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த இரண்டு கட்டிடங்களினதும் நிர்மாணங்களுக்கான உடன்படிக்கை செய்யப்பட்ட மதியுரைக் கட்டணத்தில் 94 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன் அந்தச் சேவை இரண்டு கட்டிடங்களினதும் 6 தட்டுக்களையுடைய ஒரு கட்டிடத்தின் தூண் வரையிலான 03 கொங்கிரீட் தட்டுக்களை அமைப்பதற்காக மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

**(ஈ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பொறலங்கட தாய்சேய் சிகிச்சை நிலையக் கட்டிடத்தின் நிர்மாணம் ரூபா 11,360,262 மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் உப ஒப்பந்தக் கையளித்தல் முறையின் கீழ் உப ஒப்பந்தகாரரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி மாதத்தின் போது பௌதீக பரீசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் 40 சதவீதம் ரூபா 4,646,890 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கட்டிட நிர்மாணத்திற்காக அத்திவாரம் போடப்பட்டு 04 அடி அளவான சுவர் கட்டப்பட்டு செயற்திட்டத்தின் வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

(ii) புளத்கொஹுபிட்டி வராந்த சந்தை நிர்மாண செயற்திட்டம் ரூபா 34,911,653 மதிப்பீட்டுக் கிரயத்தின் அடிப்படையில் அரசாங்க கூட்டுத்தாபனத்தால் உப ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் செயற்திட்டத்தின் நிர்மாணங்களின் நிதிசார் செயல்முன்னேற்றம் 17 சதவீதம் அதாவது ரூபா 6,096,970 ஆகக் காணப்பட்டதுடன் நிர்மாணங்களின் செயல்முன்னேற்றம் அத்திவாரம் இட்டு தூண் அமைத்து இரும்பு திராந்தி அமைத்தல் வரை மேற்கொண்டு செயற்திட்டத்தின் வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

(iii) புளத்கொஹுபிட்டி சுடலைக் கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 21,798,622 மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு வேலை நிறுத்தப்பட்டதன் பின்னர் உப ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் அதன் நிதிசார் செயல்முன்னேற்றம் ரூபா 11,457,845 அதாவது 53 சதவீதமாக இருந்தது. வேலையின் பௌதீக செயல்முன்னேற்றத்தை பரீட்சித்த போது கட்டிட நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய பிரதான வேலைப்பகுதியான புகைபோக்கி மற்றும் முகட்டினை பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) திப்பிட்டி வாராந்த சந்தை நிர்மாணிக்கும் வேலையின் முதலாவது கட்டம் மற்றும் இரண்டாவது கட்டங்களுக்காக முறையே ரூபா 12,819,040 மற்றும் ரூபா 8,298,276 ஆக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டின் போது அதற்காக நிதிஎற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க கூட்டுத்தாபனத்தினால் உப ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்ட இந்த வேலைகள் 2016 பெப்ரவரி மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது அதன் நிதிசார் செயல்முன்னேற்றம் முறையே ரூபா 5,204,290 அதாவது 41 சதவீதம் மற்றும் ரூபா 4,617,757 அதாவது 56 சதவீதமுமாக இருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் போது அத்திவாரம் இட்டு 18 தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு வேலை கைவிடப்பட்டிருந்தது,

(v) 2014 ஆம் ஆண்டின போது மதிப்பீடு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நடைமுறை வேலையாக்கப்பட்ட கஹவந்தல வீதியில் 4.9 கிலோ மீற்றர்களை நிர்மாணிக்கும் வேலைக்காக மதிப்பீட்டு வேலைப் பெறுமதி ரூபா 93,827,559 ஆக இருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் 0.8 கிலோ மீற்றர் அளவு மாத்திரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ரூபா 32,387,559 தொகை செலுத்தப்பட்டதன் பின்னர் வேலை கைவிடப்பட்டிருந்தது. வேலை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக இந்த வீதியை

இலக்கிடப்பட்ட பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முடியாதுள்ள நிலை ஏற்பட்டிருந்தது.

(vi) 2014 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நடைமுறை வேலையாக்கப்பட்ட மாலியத்த மீபிட்டிவல வீதியின் 2 கிலோ மீற்றரை நிர்மாணிக்கும் வேலைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா 53,567,628 ஆக இருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் 0.4 கிலோ மீற்றர் அளவு மாத்திரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாணம் கைவிடப்பட்டிருந்ததுடன் அது வரையில் ரூபா 15,258,123 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(vii) 2014 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நடைமுறை வேலையாக்கப்பட்ட சுதுகல சந்தி எறம்பல வில்லன்கொட வீதியின் 03 கிலோ மீற்றரை நிர்மாணிக்கும் வேலைக்கான மதிப்பீட்டு வேலைப் பெறுமதி ரூபா 75,213,407 ஆக இருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும், 1.7 கிலோ மீற்றர் அளவு மாத்திரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. அது வரையில் செயற்திட்டத்திற்காக ரூபா 28,844,232 செலவிடப்பட்டிருந்தது,

## 3.9 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 2014 ஆம் ஆண்டில் கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியின் அடிப்படையில் றம்புக்கன பிரதேச செயலாளர் பிரிவில் கஹம்பிலியாகொட கிராமத்தில் செட்டாவுல் உண்டுன் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான 6 செயற்திட்டங்களுக்காக ரூபா 3,409,074 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக வழங்குவதற்கு இணக்கப்பட்டிருந்த அமெரிக்க டொலர் 110,000 தொகையைக் இடைநிறுத்துவதற்கும், 2015 ஆம் ஆண்டில் புதிதாக 02 செயற்திட்டங்களையும், எதிர்வரும் 02 ஆண்டுகளில் 6 புதிய செயற்திட்டங்களையும் உள்ளடக்கி செயற்திட்டத்தை விரிவுபடுத்தி வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட உதவிப் பணத்தை இரத்துச் செய்வதற்கும் அந் நிறுவனத்தால் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தாய்மார்களுக்கு மாதாந்தம் போசணை உணவினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 திசெம்பர் 09 ஆந் திகதி வரையில் ரூபா 9,507,000 நிதி ஏற்பாடு றம்புக்கன பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 7,942,000 தொகை மார்ச் மாதம் முதல் யூன் மாதம் வரை செலவிடப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 1,565,000 தொகை எதிர்வரும் 05 மாதங்களுக்காக போதாமையினால் தேவையான மேலதிக நிதிஏற்பாட்டிற்கான விண்ணப்பம் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமையினால் கணக்காய்வுத் திகதியான 2015 திசெம்பர் 09 ஆந் திகதி வரையிலும் எதிர்வரும் 05 மாதங்களுக்காக போசணையான உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவை வழிகாட்டிகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அவ்வாறன சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாடுகளிலிருந்து 14 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் வேலை நிறுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அந்த செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்குப் புறம்பாக அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு நடைமுறைகளின்றியும் முறையான தகுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமலும் உப ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்விதாரருக்குத் தேவையான சகல தகவல்களும் கேள்வி கோரல் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், மாவட்ட செயலகத்தினால் கொள்வனவுகளின் போது கேள்வி கோரல் கடிதங்களில் கேள்வி கோருபவர்களுக்குத் தேவையான கூறுவிலைகள், கோரப்படுகின்ற தொகுதியின் மாதிரி, கூறுவிலை அனுப்பவேண்டிய இறுதித் திகதி மற்றும் நேரம், கூறுவிலை அனுப்ப வேண்டிய முறை, கூறுவிலை யாருக்கு அனுப்ப வேண்டும் போன்ற தகவல்கள் கேள்வி கோரல் கடிதங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யோகம தாய்சேய் சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்குரிய மதிப்பீட்டு வேலை விடய இலக்கம் ஜீ 02 மற்றும் ஜீடீ இற்குரிய வேலைப்பகுதி எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 20 ஆந் திகதி வரையில் செயற்திட்டத்திற்காக ரூபா 498,334 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கல்பொக்க தாய்சேய் சிகிச்சை கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலை விடய இலக்கம் 20 இற்குரிய எந்த வேலை விடயமும் நிறைவேற்றப்படாதிருக்கும் போது அதற்காக ரூபா 619,426 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் 100 நாள் விஷேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக கிராமங்களை கட்டியெழுப்பும் 2015 இன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பஹலகம ஆலய வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 220 நலனாளிகளுக்காக வீதியின் 212 அடி நீளத்திற்கு கொங்கிரீட் இடுவதற்காக அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 300,000 தொகையும், சமூகப்பங்களிப்பு ரூபா 75,000 தொகையுமாக ரூபா 375,000 மதிப்பீடொன்று 2015 யூன் 22 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பஹலகம விவசாய அமைப்பின் கோரிக்கையின் அடிப்படையில் அந்த மதிப்பீடு திருத்தப்பட்டு சமூகப் பங்களிப்பின்றி அரசாங்க பங்களிப்புடன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு மீண்டும் மதிப்பீடொன்று ரூபா 294,000 தொகையில் 2015 செப்தெம்பர் 10 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு அந்தச் சங்கத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வீதியின் நீள அடி 160 ஆக இருந்ததுடன், அது முன்னைய மதிப்பீட்டைவிட 52 அடி குறைக்கப்பட்டிருந்தது. இரண்டாவது மதிப்பீட்டின் நீள அடியொன்றின் கிரயம் ரூபா

458 தொகையான மேலதிக மதிப்பீடு செய்யப்பட்டமையால் கிரயம் ரூபா 73,424 இனால் அதிகரித்திருந்தது.

(ஈ) மாகாண புறநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யட்டங்வல கந்த வீதி கற் கிணறு அருகிலிருந்து முன்னாலுள்ள வளைவில் கொங்கிரீட் இடும் செயற்திட்டத்திற்காக வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் வீதி மேற்பரப்பை மட்டப்படுத்துவதற்காக ABC கலவை இடுவதற்காக ரூபா 11,862 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த வீதிக்காக ABC கலவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) யட்டங்வல விகாரை அருகிலள்ள வீதியில் பக்கச் சுவர் நிர்மாணிக்கும் வேலை விடயத்தின் 06 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நீர் வழிந்தோடுவதற்காக "1-6" விட்டத்துடன் ஹியூம் குழாய் வழங்கிப் பொருத்துவதற்காக 08 அடி நீளத்திற்காக ரூபா 11,680 மதிப்பீடு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஹியூம் குழாய் வழங்கி பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வேலை விடய இலக்கம் 03 இன் கீழ் 1:5 இல் சீமெந்து, மணல் கலவையில் ஆலோசனையின் பிரகாரம் சிறுகற்கல் சுவரின் 140 அடி நீளத்திற்கு சாந்து பூசுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டு 110 அடி நீளத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் போது துண்டுக்கல் சுவரின் நீளம் 95 அடியும் 10 அங்குலமும் மாத்திரமாக இருந்தது. இதன் பிரகாரம் ரூபா 61,493 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) தல்வத்த பன்சல ஊடாக கொட்டலுகந்த வீதியில் 02 சேதமடைந்த இடங்களை கொங்கிரீட் இடுவதற்கான திட்டத்தின் பிரகாரம் 120 அடி நீளத்தில் கொங்கிரீட் இடப்பட்டிருந்த போதிலும், அறிக்கையின் பிரகாரம் 3 வேலை விடயங்களின் கீழ் 254 அடி நீளத்திற்காக அடிக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே எஞ்சிய 134 அடி நீளமான அளவு பௌதீக பரிசோதனையின் போது திட்டத்திலில்லாத (வரைபடம்) வேறொரு வீதியில் அமைந்துள்ள இடமொன்றைக் காண்பித்ததுடன் அந்த இடத்தில் காண்பிக்கப்பட்ட அள அறிக்கையினை விட 2 அடி நீளத்தால் குறைவடைந்திருந்தது.

## 3.12 நட்டமும் இழப்பும்

வறக்காப்பொல பிரதேச செயலகத்திற்குரிய கெப்வண்டி வாகன விபத்தில் நட்ட இழப்பிற்குள்ளாகியிருந்தது. நீதிமன்றத்தால் நபரொருவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த போதிலும், மேலும் அறவிட வேண்டிய ரூபா 110,050 தொகையை அவரிடமிருந்து அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.13 முகாமைத்துவ நலிவுகள்

வீதியினை நிர்மாணிக்கும் போது இருபக்க காணியையும் கைப்பற்றிக் கொள்வதற்குரிய இழப்பீட்டுப் பணம் செலுத்துவதற்காக ரூபா 2,163,050 தொகை பல்வேறு அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைத்திருந்தது. அந்த வீதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், உரிய காணி உரிமையாளர்களுக்கு அந்த இழப்பீட்டுப் பணம் செலுத்தாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.14 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 38 | 5 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 23 | 7 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,047 | 1,014 | 38 | 5 |
| (iv) | ஆரம்ப நிலை | 106 | 112 | 06 | 12 |
| | மொத்தம் | 1,226 | 1,187 | 56 | 17 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) றுவன்வெல்ல பிரதேச செயலகத்தில் 37 பதவியணி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 38 மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் மிகையாகக் காணப்பட்டதுடன் தேவையான பதவிகளான தொழில்நுட்ப உத்தியோகத்தர், மொழிபெயர்ப்பாளர், கிராம உத்தியோகத்தர், தகவல் தொடர்பாடல் போன்ற 06 பதவிகளுக்குரிய 07 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 07 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கும், 38 மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கும் மற்றும் 37 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காகவும் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்பதவிகளை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய திணைக்களங்களின் நியமனங்களுக்குரிய தெஹியோவிட்ட பிரதேச செயலகத்தில் 47 வெளிக்கள உத்தியோகத்தர்கள் அலுவலகத்திலும், வெளிக்கள சேவையில் ஈடுபட்டிருக்கின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 70 பேரும், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் 70 பேரும் ஆக 186 பேர் பதவியணி அங்கீகரித்துக் கொள்ளாமல் சேவையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.